**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 04.03.2024.

**PW−7: கோபி**

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A7, A9, A13, A15, to A18 present. A6, A8, A11, A14 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தேசிங்குபாலனை, காசிநாதன் மற்றும் அவரது மகன்கள், பிரபு, சுரேஷ் ஆகியோர் வெட்டி கொலை செய்துவிட்டதாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் சாட்சி சொல்லவில்லை. இவ்வழக்கில் சாட்சிகளாக உள்ள மல்லிகா மற்றும் கோவிந்தசாமி ஆகியோர் எனது பெற்றோர்கள் என்றால் சரிதான். எனது பெரியப்பா மச்சகேந்திரன் என்றால் சரிதான். அவரது மனைவி கைகேயி இவ்வழக்கில் ஒரு சாட்சி என்றால் சரிதான்.

என் தம்பி செல்லப்பன் (எ) பரசுராமன் இவ்வழக்கில் ஒரு சாட்சி என்றால் சரிதான். அவருடைய உண்மையான பெயர் பரசுராமன் என்றால் சரிதான். அ.சா.1 ராஜலிங்கம் மற்றும் அவரது சகோதரர்கள் எனது உடன் பங்காளிகள் என்றால் அவர்கள் பங்காளிகள் எதிரிகளில் சிலரும் எனது பங்காளிகள் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். போலிசார் விசாரணையில் எதிரிகள் உறவினர்கள் என்றோ, பங்காளிகள் என்றோ நான் சொல்லவில்லை என்றால் போலிசாரிடம் எதிரிகள் எனது உறவினர்கள் என்று மட்டும் சொல்லியிருக்கிறேன். பங்காளிகளா என்று கேட்காததால் நான் சொல்லவில்லை.

எதிரிகள் எனது உறவினர்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் நான் முதுநிலை மருத்தாக்கவியல் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்ததாக சொல்லியிருக்கிறேன். சம்பவத்தன்று எனக்கு Study Holiday என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேன். நான் படித்துக்கொண்டிருந்தபோது வழக்கமாக காலை 7.30 மணிக்கு புறப்பட்டு கல்லூரிக்கு

செல்வேன். எனது வீட்டிற்கும் நான் சம்பவ சமயத்தில் படித்துக்கொண்டிருந்த அண்ணாமலை பல்கலைகழகத்திற்கும் இடையே 30 கி.மீ தொலைவு. சம்பவதினத்தன்று நான் காலையிலேயே புறப்பட்டு கல்லூரிக்கு போய்விட்டேன் என்றாலும், நான் ஊரிலேயே இல்லை என்றாலும், நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் எந்த வழக்கு சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து அதன்பேரில் முதல்விசாரணையில் பொய்யான சங்கதிகளை சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

போலிசார் விசாரணையில் எதிரிகள் ராஜதுரை, தினேஷ் ஆகியோர்களை தவிர வேறு எதிரிகள் யாரையும் நான் சம்பவத்தின் போது பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலிசார் என்னிடம் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. எனவே தான் முதல்விசாரணை சாட்சியத்தில் சொல்லியிருக்கிறேன்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.